**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - பகுதி II திட்டம் – 2005-2006 – தொடக்கக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் 100 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு கணினிகள் வாங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (ஆர்.1) துறை**

அரசாணை (நிலை) எண்.69
நாள் 16.5.05

ஆணை

தொடக்கக் கல்வித் துறையின் கீழ் செயல்படுகின்ற 415 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களில் 833 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல் படுத்துவற்காகவும், கணக்குகளைத் தயாரித்து பராமரிக்கவும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கணினிகள் வழங்குவது அத்தியாவசியமாகிறது.

2. தொடக்கக் கல்வித் துறையில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் தகவல்களை கணினியின்றி பெறுவது மிக கடினமானது. நுண்ணிய அளவில் திட்டங்களை செயல்படுத்துவதற்கு அடிப்படை அலகாக பள்ளி உள்ளது. மாநில அளவில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தகவல்கள் பெறப்படவும் தேவை உள்ளது. கல்வி, மேலாண்மை, தொழில் நுட்பங்கள் ஒன்றிய அளவில் தொகுக்கப்பட வேண்டியுள்ளது. எனவே கணினிகள் மற்றும் அச்சு பிரதி எடுக்கும் கருவிகள் (Printers) அடிப்படைத் தேவையாக உள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் சராசரி 94 பள்ளிகளும் 437 ஆசிரியர்கள், 15734 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. உதவித் தொடக்கக் கல்வி அலுவலரால் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களை இதர பணிகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது.

1) பள்ளி வயதுடைய சிறுவர்களை இனங்கண்டு கணக்கெடுத்தல்.

2) பள்ளி வசதி, சேர்க்கை, தக்க வைத்தல் மதிப்பிடுதல் போன்ற பணிகள்.

3) நல திட்டங்கள் மற்றும் பள்ளி கட்டிடப் பணிகள்

4) ஆசிரியர்களின் பணி சார்ந்தவை (மாறுதல், பணிநிரவல், பதவி உயர்வு, நியமனம்)

5) புதிய பள்ளி துவக்குவதற்கான அங்கீகாரம்.

6) நிதியுதவி பெறும் பள்ளிக்கு மான்யம்

7) ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி

8) பள்ளிகளின் ஆண்டாய்வு

9) பள்ளிகளுக்கு உள் கட்டமைப்பு வசதிகள் போன்ற புள்ளி விவரங்கள்

பெறப்பட்ட விவரங்கள் மாநில அளவில் தொகுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை மிக துல்லியமாகப் பெறபட வேண்டியது அவசியம். உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களில் கணினிகள் இல்லாததால் இத்தகைய புள்ளி விவரங்களை சேகரிப்பதில் தொடக்கக் கல்வி இயக்ககம் சிரமத்திற்குள்ளாகிறது. எனவே 100 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு கணினிகள் வாங்கவும் இத்திட்டத்திற்கு தொடராச் செலவினமாக ரூ. 50.00 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு 2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட தொடக்கக் கல்வி இயக்குநர் வேண்டியுள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரது மேற்கண்ட கருத்துரு 2005-2006ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட்டு இத்திட்டத்தினை செயல்படுத்திட தெடராச் செலவினமாக ரூ.50.00 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

4. தொடக்கக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் 100 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களில் பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக கணினிகள் நிறுவ ரூ.50,00,000 (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினமாக அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்படும் செலவினத் தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 - பொதுக் கல்வி 01 தொடக்கக்கல்வி 001 நெறிபடுத்துதலும் நிருவாகமும் - I - திட்டத்தில் சேராதது - AA தொடக்கக் கல்வி இயக்ககம் 76 கணினியும் துணைப்பாகங்களும் -01 வாங்குதல் (த.தொ.கு.2202 01 001 AA 7619)

6 இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.23735/கல்விII/05 நாள் 25.4.2005ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6
மாநில கணக்காயர், சென்னை 18 (பெயர் உறையில்)
சம்பள கணக்கு அலுவலர்,சென்னை- 35

நகல்

நிதித் (BG II / கல்வி II) துறை சென்னை 9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை- 9
கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.